25-8-1994
Hindu Lodge
Nallur Jaffna

*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,

'The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka

Under No.Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

**Vol: 155 Jaffna, Friday 29, July 1994 No: 16**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs.100/-
*For Advertisements*

*Apply to:*
THE MANAGER

'The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

PUBLIC LIBRARY
NALLUR BRANCH LIBRARY.

## First Asian Bishop in The Church of England

Dr. Michael Nazir - Ali, 45, holder of British and Pakistani dual citizenship becomes the first Asian Bishop in the Church of England. He will be the 106th Bishop of Rochester and will succeed Dr. Michael Turnbull, the new Bishop of Durham.

Dr. Nazir - Ali is one who believes that the Third World should supply Missionaries to re-Christianise Britain. "I hope my appointment is a marker for the globalisation of Christianity in this country", Dr. Nazir - Ali said in a recent interview. He served as the General Secretary of the Church Missionary Society. He was very much involved in the preparation for the 1988 Lambeth Conference which brought together all the Bishops of the Anglican Communion worldwide. He is part of the Anglican delegation in standing talks about visible unity with Rome. He also serves as Secretary of the Earnes Commission which is instrumental in regulating relations between the section of the Anglican Communion which ordain women and those which do not.

Dr Nazir - Ali has said that historically there have been three ways for Christianity to deal with the difficulties posed for it by the rise of Islam Viz; the Western crusading response, the response of Byzantium, which was to heap scorn and abuse on Islam and the response of those large number of Christians who actually lived in the Islamic World and who helped to create what is called Islamic Civilisation. He says that it is the response of the third group that will help to make a distinction between modern fundamentalism which gives little room for co - existence and the devotion of ordinary Muslims that deserves respect.

### Church, Politics And War

The Christian Institute For the study of Religion and Society (CISRS), Chunnakam organised a discussion on the book-"Church, Politics and War-Theologising Contextually Amidst A War" by the Revd. Fr. S. J. Emmanuel, Vicar General of the Roman Catholic Church in Jaffna and the Rector of St. Francis Xavier Roman Catholic Seminary, Columbuthurai at the Mission House, Manipay on Thursday, July 21 st, 1994. Few clergy and Lay People from

( Continued on page 4 )

## Harare - The Venue for WCC's 8th Assembly

Harare was chosen as the site for the WCC's Eighth Assemble in 1988 in the first round of secret ballot. Jonathan Siyachitema, President of the Zimbabwe Council of Churches told that the invitation had been endorsed by the Roman Catholic Bishops and African Independant Churches in Zimbabwe.

The Executive Committee had proposed "Now is the time: repent and rejoice" as Assembly theme. This was later modified as "Now is the time: repent in hope". It is understood that this too failed to persuade enough delegates. A suggestion made that the theme should reflect the biblical motif of "jubilee" is now being carefully considered.

## ANNUAL PEACE PRIZE

Elias Chacour, a Melkite priest who is well known for his role in the work towards reconciliation between Israelis and Palestinians was awarded the Annual Peace Prize by the World Methodist Council at its meeting in Bombay.

Chacour is the founder of the College of Ibillim, near Nazareth which has a faculty of Christians, Jews and Muslims. Anwar Sadat, Jimmy Carter and Mikhail Gorbachev are some of the noteworthy recipients of this prize which was instituted in 1977. It is to be noted that Chacour is the first Catholic to receive this award.

## Half the Babies born in Jaffna District last year died

According to the records in the Jaffna Secretariat, 13491 children were born in Jaffna District last year of which 6019 children died. 54% of the babies born were girls. The continuing war situation, lack of medical facilites and malnutrition were attributed as causes of the high infant mortality rate.

## Emergency over but action in North and East will continue

"Though the Emergency regulation ceases to operate action will continue against militancy". This opinion was expressed by the Spokesman of the Sri Lankan Security Force. He further told that Army action will continue without any restrictions. Even in the absence of Emergency Power, the Army is entiled to launch action against terrorism. As such action against Tigers will continue as before. It is understood that the ban imposed ton specific items will also no be lifted up!

## WEDDING

The Wedding Bells will ring on Saturday, 6 th August 1994 at 5.00 p. m. at the Grace United Methodist Church,Fredrick Avenue Gathersburg, Maryland, U. S. A. when Niranjan and Diyana are led to the Altar to be married.

Niranjan is a son of Mr. & Mrs. R. J. Gunaratnam who are currently residing in the U. K. and Diyana is the daughter of Mrs. Kamalam Sanders and the Late W. T. Sanders. The Morning Star wishes the couple a happy married life.

### Worship Services in English

Jaffna City Mission Church of the Jaffna Diocese of the Church of South India has recently started worship services in English. These services are held on the fourth Sunday of every month at 4. 30 p. m. at the City Mission Church Centre, 4 th Cross street, Jaffna.

### Institute For Lay People

The Christian Theological Seminary of Sri Lanka & Institute for lay people, Chunnakam organizes a programme for lay people of Jaffna District once a month at the Seminary. This programme is called "Theological Education For Christian Commitment and Action (TECCA) ". The next session on the theme "SPIRITUALITY AND PRAYER" will be held on Saturday, August 27, 1994 at 9.00 a.m

### The Salvation Army, Jaffna

An Exhibition and Certificate giving ceremony of the 5 th Batch of Pre-Schoolers and Trainees in Vocational Education was held on Tuesday, 26 th July, 1994 at 9. 30 a. m. at the Salvation Army Home & Church, Kaithady. The Rt. Revd. Dr. S. Jebanesan, Bishop in Jaffna, Church of South India and Mrs. Vimala Jebanesan were the Chief Guests.

## 175 th Anniversary

Jaffna Central College will be celebrating its 175 th Anniversary in early August this year. The College is elevated as National School with effect from this month.

**J. D. C. S. I. - *YOUTH SUNDAY***

**August 14th 1994**

*THEME:* **BLESSED ARE THE PEACE MAKERS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டு மரபுகளும் கிறிஸ்தவமும்

(முன் இதழ் தொடர்ச்சி)

தமிழர் பண்பாட்டு மரபுகள் என்பவை கத்தோலிக்க சமயத்தில் மிகக் கூடுதலாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. உதாரணமாக திருமணத்தின்போது தாலி கட்டுவது, கூறை உடுப்பது, மாப்பிள்ளைக்கு காலில் தண்ணீர் ஊற்றி அவர் மோதிரத்தை பெண்ணின் சகோதரர் கையில் அணிவிப்பது, திருமணம் முடிந்து கணவர் வீடு சென்று நாலாம் நாள் பெண் வீட்டுக்கு அழைத்து வரப்படுவது - இவை யாவும் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

அதேபோன்று ஒருவர் வெள்ளிக்கிழமையில் இறந்தாலும், அல்லது அந்நாளில் உடலைத் தகனம் செய்ய எடுத்துச் செல்ல முன்பும் பிரேதப் பெட்டியினுள் முட்டை வைத்தல் போன்ற சில மூட நம்பிக்கைகளும் தொடர்ந்தும் கற்றவர் மத்தியிலும் பேணப்பட்டு வருவது தமிழர் பண்பாடு சமயத்தாரால் அழிக்கப்படவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அதேபோல 8 ஆம் நாள் செலவு வைப்பது, 31 ஆம் நாள் பலருக்கு உணவளிப்பது, இறந்த இடத்தில் 3 நாளும் விளக்கும், நீர் நிறைந்த செம்பும் வைப்பதும் தொடரும் தமிழ் மரபுகளாகும்.

பெண்ணின் பருவ நிறைவு விழாவிலும், தாய்மாமன் அப்பெண்ணின் தலையில் நீர் வார்ப்பதும், சகல கிரியைகளிலும் தாய் மாமன் தலைமையுடன் பங்கு பற்றுவதும், சகல விழாக்களிலும் நிறைகுடம் வைத்து, குத்துவிளக்கேற்றி, சந்தனம் பனநீர் தெளித்து வரவேற்பது தொடரும் தமிழ்ப் பண்பாடாகும் கத்தோலிக்க விழாக்களில் வரவேற்கும்போது ஆரத்தி எடுத்து, பொட்டிட்டு, மாலை அணிவித்து வரவேற்பது அனைவராலும் வதும், வழிபாட்டில் சிற்சில மாற்றங்களைக் கொண்டுவந்ததும் குறிப்பிடத்தக்கதாகும் இதனைத் தனிநாயகம் அடிகளார் சமுதாய நெறிகளை, அமைப்பு முறைகளை, பாரம்பரிய மரபுகளை, பண்பாட்டுப் பிரிவுகளை தள்ளிவைத்து ஒதுக்கிய நிலையில் வழங்கப்படும் கிறிஸ்தவ வாழ்வு உயிரற்றது என வலியுறுத்துகிறார்.

தமிழர் பண்பாட்டில் மிகச்சிறந்த வெளிப்பாடான இலக்கிய வகைகளைக் கத்தோலிக்கமதம் ஏற்றுச் செயற்பட்டதன் விளைவாகவே கிறித்தவமும் தமிழும் என்றவகையில் இணைந்து பெருமை பெறுகின்றது. தமிழ்நாட்டைச் சேர்ந்த அந்தோனிக்குட்டி அண்ணாவியார், அரி கிருஷ்ணபிள்ளை, சற்குணம் உவுன் பிற்ற ஐயர், சாமுவேல் பவுல் ஐயர், நயனப்ப முதலியார், முத்துச்சாமிப்பிள்ளை வித்துவான், சாமிநாதபிள்ளை, முதலியவர்களும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கனக பைபபுலவர், குமாரகுலசிங்க முதலியார், சதாசிவம்பிள்ளை, சிதம்பரபிள்ளை போன்றோர் தமிழைச் சமயத்தினால் மறைந்து விடாமல் இலக்கியம் செய்து மறைந்தனர்கள்

பல மொழிகளில் தமது முத்திரையைப் பதித்துச் சென்றவர்கள் கிறிஸ்தவப் பாதிரிமார் யேசுவைப் பாதிரிமார்களே முதன் முதலில் தமிழில் அச்சுப் புத்தகம் உண்டாக்கினார்கள். முதல் அச்சுப் புத்தகம் ''கிறிஸ்துவ வேதோபதேசம்'' என்பது வைப்புக் கோட்டை எனும் ஊரில வெளியிடப்பட்டது. மதம் பரப்புவதற்காக புத்தக வெளியீடு அமைந்தாலும் மொழிப்பண்பாட்டு வளர்ச்சிக்கு இது பெரிதளவில் துணை போனதைத் தமிழுலகம் மறததலரிது.

ஜி யு போப் ஐயர், கால்ட்வெல் ஐயர், பெர்ஸிவல் ஐயர் போன்

திருமதி ஆர் இருதயநாதன்
B.A. DIP. in. Ed
(பிரதிக் கல்விப்பணிப்பாளர் — சண்டிலிப்பாய்)

ஏற்றுக்கொள்ளப்பட்டு, செயற்பட்டு வருவது ஆரம்ப காலத்தில் இல்லாவிட்டாலும் 20 ஆம் நூற்றாண்டில் காணப்படும் செயற்பாடுகளாகும்.

இந்துக்களும் கத்தோலிக்க கிறித்தவர்களும் சமய சமூகப் பண்பாட்டு நியமங்களில் அதிகம் மோதிக் கொள்ளாவண்ணம் சில புரிந்துணர்வுகளோடு அனைவரையும் அணைத்துச் செல்லும் தன்மைகள் இக் கிரிகைகளில் காணப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் தைப் பொங்கல் கத்தோலிக்கரால் கொண்டாடப்படவில்லை. ஆனால் மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில விவசாயிகளாக இருந்த கத்தோலிக்கர் தைப்பொங்கலன்று பொங்கிக் களிப்பெய்தியதை அறியக்கூடியதாக உளளது.

கிறிஸ்து ஒருசாராருக்கு உரியவரல்ல அவர் அனைவருக்குமே மீட்பர். மனுக்குலத்தை மாண்புறச் செய்யும் பண்பாடுகள், பலதரப்பட்ட செயற்பாடுகளனைத்தையும் தம் மீட்பின் ஆசியால் நிரப்பினார் என்றும் அதேபோலப் பாவச்சாயல் தோய்ந்த பண்பாட்டுப் பகுதிகள் அனைத்தையும் தமது சாவினால் மரணத்துக்குள்ளாக்கினார் என்பதும் கிறித்தவ இறையியல் விளக்கங்களாகும். எனவே மனுக்குல மீட்சியைத் தடைசெய்யாத அவனைப் பாவத்திற்குள்ளாக்காத எந்தவொரு தமிழ் பண்பாட்டையும் பின்பற்றுவதில் தவறில்லை என கத்தோலிக்கர் கருதியதனால்தான் இன்று தென்னிந்தியாவிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் தமிழ் பண்பாட்டுடன் கிறிஸ்தவ மறை பல நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றது. ஆலயங்களில் பாடப்படும் மேல்நாட்டு (அதாவது லத்தீன்) பாடல்கள் இன்று குறைக்கப்பட்டுக் கர்நாடக இசை பொருந்தியதாகக் கீர்த்தனைகள் அமை றோர் தமிழில் கிறித்துவைக் கண்டவர்கள். மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் இவர்கள் பற்றி பெருமையுடன் விபரிக்கும் அளவிற்கு தமிழும் கிறித்தவமும் இணைந்து வளர்ந்தமை தெளிவாகப் புரியக்கூடியது போர்த்துக்கேயர் மதமாற்றத்தை அணுகிய போது தென்பட்ட முரண்பாடுகள், பயங்கர வெறுப்புணர்வுகள், சந்தேகத்துடன் சந்திக்காமல புரிந்துணர்வுடன் செற்படுவதற்கு இந்துமதத்தையும் அதன் பண்பாடுகளையும், அதாவது தமிழர் தம பண்பாடுகளையும் வெறுப்புடன் ஒதுக்காமல், அந்நேரம் பொருத்தமற்றவற்றை நீக்கி, கிறிஸ்தவ மதிப்பீடுகள் மாற்றமுறா வண்ணம் ஏற்றுக்கொள்வதில் தான் இன்றைய கிறிஸ்தவம் வெற்றிபெறும். ஏனெனில் மதமும் பண்பாடும் சிந்திக்கக் கூடியதல்ல பண்பாடுகள் வெறும் வெளிப்புறச் சடங்காச் சாரங்கள் தான் இவைகள் கிறிஸ்தவனின் உள்ளத்தை மாசுபடச் செய்வன அல்ல. சுமூகமான முறையில் அணுகும் நிலையில் கிறிஸ்தவத்தின் பல தன்மைகள் இந்து மதத்தில் பின்பற்றுவதைக் காணக் கூடியதாய உள்ளது.

இன்று தமிழ்பண்பாட்டை மேம்படுத்திக் கிறிஸ்தவத்துடன் சேர்ந்து நோக்கும் வகையில் திருமறைக் கலாமன்றம் இயங்கி வருவது போற்றுதற்குரியதாகும்

சமயமானது சமூகத்தை ஒன்றுபடுத்தி அனைவரது ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழிகாட்ட வேண்டியதாதலால தமிழ் பண்பாட்டு மரபுகளை ஏற்பதின் மூலம் மனமுரண்பாடற்றதோர் சமுதாயத்தை உருவாக்க அனைவரும் கருத்தொருமிப்போம்.

# ⁂ செய்திச் சிதறல் ⁂

## நெடுந்தீவு

1991 ஆம் ஆண்டு நெடுந்தீவில் இரண்டாவது சிறுவர் பராமரிப்பு நிலையம் தீவின் மேற்குப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது தற்போது புதிய கட்டடம் அமைக்கப்பட்டு 35 பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றனர்.

கே என் எச் உதவியுடன் நடைபெறும் முதலாவது நிலையம் மற்றும் ஆலயம் குருமனை ஆகியன புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மின் இயக்கி மூலம் ஒளிவசதிகளைப் பெறக்கூடியதாக உள்ளது நெடுந்தீவில் அருட்திரு ஜெ. ஞானப்பிரகாசம் சிறந்த பணிகளை மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஷாலோம் நகர்

கிளிநொச்சி பகுதியில் புதுமுறிப்பு கிராமத்தில் உள்ள ஷாலோம் நகர் சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அருட்திரு ரி. எச் வசந்த குமார் தலைமையில் 22 07 94 அன்று நடைபெற்றது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. பொன் சபாபதி பேசுகையில், புதுமுறிப்புக் கிராமத்திலிருந்து கிளிநொச்சி பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளிலும். தமிழ் மொழி கலைத்திறன் போட்டிகளிலும் முதலிடங்களைப் பெறுவதற்கு இச்சிறுவர் நிலையத்தின் வழிகாட்டலும், ஊக்குவிப்புத் திறனுமே அடிப்படைக் காரணங்களென நிலையத்தின் நிர்வாகத்தினருக்குப் புகழாரம் சூட்டினார்.

## தமிழ்ப்பண்பாட்டில் கிறிஸ்தவம்

கத்தோலிக்க திருச்சபையின் முன்னாள் ஆயர் பேரருட்கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்களின் திருப்பணி, தமிழ்ப்பணி, பொதுப்பணி ஆகியவற்றைக் கௌரவிக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரீகத்துறையினர் ஒழுங்கு செய்திருந்த ஆயர் மாட்சி விதப்புப் பேரை நிகழ்வுகள் நூல் வடிவில் சமீபத்தில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பட்டது கிறிஸ்தவ நாகரீகத்துறைத்தலைவர் அருட்கலாநிதி ஏ ஜே. வி. சந்திரகாந்தன் இந்நூலின் பதிப்பாசிரியராவார் இந்நூல் தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் விற்பனையாகிறது ஒவ்வொரு தமிழ்க் கிறிஸ்தவனும் இதனைப் படிப்பது அவசியம்.

சாது சுந்தர் சிங் கதை

## பாவம் என்னும் பாம்பு!



நீண்ட காலமாய் நோய்வாய்ப்பட்ட மனிதன் ஒருவன் இருந்தான். தன் பலத்தை எலலாம் இழந்து பலவீனப்பட்டிருந்த அவனுக்கு மிகச் சில வாழ்நாட்களே எஞ்சியிருந்தன. ஒருநாள் அவன் தனிமையில் படுத்திருந்தபோது தன்னை ஒரு பாம்பு நெருங்கி வருவதைக் கண்டான். தன் உயிரைக் காத்துக்கொள்ள அவன் விரும்பினாலும் அவனால் முடியவில்லை. அவனுக்கு உயிர் இருந்தது; ஆனால் அந்த உயிரினால் பலனில்லை. ஒரு கல்லை எடுத்து வீசி அப்பாம்பைக் கொல்ல அவனுக்கு சக்தி இல்லை. பாம்பு வருவதைப் பார்த்து அஞ்சி நடுங்கத்தான் அவனால் முடிந்தது. அது அவனைத் தீண்டிய சிறிது நேரத்திற்குள் அவன் வாழ்வும் முடிந்தது. அதன் பின் அவனது உறவினன் ஒருவன் வந்து அப்பாம்பை அடித்துக் கொன்றான் அவன் பலசாலியாக இருந்ததால் அப்பாம்பைக் கொல்ல அவனால் முடிந்தது கிறிஸ்தவர் அனேகர் ஆன்மாவில் உயிர் பெற்றிருக்கிறார்கள். ஆனால் பாவம் என்னும் நச்சுப் பாம்பைக் கொல்லும் சக்தி அவர்களுக்கில்லை. பெலனில்லாத உயிரினால் பலனில்லையே! இதன் விளைவாக சாத்தான் எனப்படும் பகைவன், பாவம் எனும் விஷத்தால் தீண்டி அவர்களைக் கொன்றுபோடுகிறான் நமதாண்டவரோ ஜீவனை மட்டுமல்ல; பரிபூரண ஜீவனைத் தருவதாக வாக்களித்திருக்கிறார். பரிபூரண ஜீவனைப் பெற்றிருப்போர் பாவம் எனும் பாம்பைக் கொல்லும் சக்தியுடையோர்.

திருடன் திருடவும், கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன்உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்.

— யோவான் 10 : 10

நினைவில் வைத்திருக்கவும்
ஆவணி 14, 1994 ஞாயிற்றுக்கிழமை
"வாலிபர் ஞாயிறு"
பொருள்: சமாதானம் பண்ணுகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்
ஆவணி 08, 1994 திங்கட்கிழமை — கொழும்பில்
குருத்துவ திருநிலைப்படுத்தும் ஆராதனை
அருட்திரு ஜே. ஞானப்பிரகாசம்
(நெடுந்தீவு சபை ஊழியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகை ஒளி

ஒடுக்கு முறையின் கீழ் உண்மையான அபிவிருத்தி காணப் படமாட்டாது. ஏனெனில், அபிவிருத்தி என்பது ஒடுக்குமுறையின் எதிர்ச்சொல்லாகும்.


# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை.

*Estd. 1841*

மலர்: 155 29 — 07 — 1994 இதழ்: 16


## சிறார் திருப்பணி

''சிறுவர்கள் என்னிடம் சேர இடங்கொடுங்கள். இறை அரசு அத்தகையோரது'' என்றார் ஆண்டவர் யேசு. எதிர் காலத் தூண்களான சிறுவர்கள் மத்தியில் ஆற்றப்படும் பணியானது இன்றியமையாத ஒரு பணியாகும். கள்ளங்கபடமற்ற சிறியவரின் உள்ளத்தில் விதைக்கப்படும் இறை அன்பானது பூத்துக் குலுங்கி ஒன்று முப்பதும் அறுபதும் நூறாகவும் பலன்தரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இறைவார்த்தைகளை மறுப்பின்றி, அகங்காரமின்றி ஏற்றுக் கொள்வது சின்னஞ் சிறார்களின் கள்ளங்கபடமற்ற உள்ளம்.

இந்த வகையில் தென்னிந்தியத் திருச்சபையின் சமயக் கல்விக் குழுவானது, சிறார்கள் மத்தியில் ஆற்றும் பணி பாராட்டத் தக்கதாகும். அண்மையில் நடைபெற்ற பிள்ளைகள் விழாவில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்வுகளும் சிறார்களின் வேத அறிவையும், அவர்கள் மனதில் ஊறியுள்ள இறை அன்பையும் வெளிப்படுத்தவும், அதை வளர்க்கவும் தூண்டிற்று எனலாம். இப் பிள்ளைகள் விழாவிற்கு முன்னர் அனுட்டிக்கப்பட்ட பிள்ளைகள் வாரத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகள், வரைதற் போட்டிகள், மனன வசனப் போட்டிகள் என்பன இறைவனிடம் நெருங்கச் சேர இன்னும் பிள்ளைகளைத் தூண்டிற்று எனலாம். பிள்ளைகளால் ஒவ்வொரு திருச்சபையிலும் நடத்தப் பட்ட ஞாயிறு ஆராதனை சிறிய வயதிலிருந்தே ஆண்டவரை சேவிக்க பெரிதும் உதவிற்று எனலாம்.

குறிப்பாக அந்த பிள்ளைகள் வாரத்தின் மகுடவாக்கியம் அதாவது ''அன்பினால் ஒருவருக்கொருவர் பணி செய்யுங்கள்'' எனும் வாக்கியம், இறை அன்பைப் பெற்றுக் கொள்ளும் மக்கள் மற்றவர்களுக்கும் தமது பணியின் மூலம் அன்பு காட்ட வேண்டும்'' என்னும் கொள்கையை சிறிய வயதிலிருந்தே மனதிற் தூண்டும் ஒரு வாக்கியமாக அமைந்தது. இன்றைய சிறார்கள் பலவேறு காரணிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். போராட்ட சூழ்நிலைகள், திருச்சபைப் பிரிவுகள், குடும்ப நிலைகள் என்று பல காரணிகள் பிள்ளைகள் மனதைப் பல்வேறு விதமாக பாதித்து வருகின்றது. இந்நிலையில் பிள்ளைகளை இறைவனிடம் சேர்க்கும் பணியானது அத்தியாவசியமான ஒன்று. இந்தப் பணியினை எமது சமயக் கல்விக் குழு ஆற்றி வருவதையிட்டு பெருமகிழ்வு கொள்கிறோம்.

இன்னும் நாம் அண்மையில் நடத்தப்பட்ட பிள்ளைகள் விழாவை நோக்கின், அங்கு நடைபெற்ற பாடல் போட்டிகள், புதிர்ப்போட்டிகள், கலை நிகழ்வுகள் ஒவ்வொன்றும் சிறிய வயதிலிருந்தே தங்கள் திறமைகளை இறைவனுக்காக பாவிப்பதற்கு பிள்ளைகளை தூண்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அது மட்டுமல்லாது பிள்ளைகளை ஊக்கிவித்து வழங்கப்பட்ட பரிசுகள், தேர்ச்சி அட்டைகள் என்பன, இந்த முயற்சிகளை தொடர்ந்து ஊக்கமாகச் செய்ய பிள்ளைகளுக்கு ஒரு ஊக்குவிப்பாக அமைந்தது.

இன்னுமாக இந்தப் பணிக்காக பெருமளவு பணத்தினை செலவழித்து சேவை ஆற்றுவது மட்டுமல்லாமல் இந்தப் பணி பரந்து செயற்பட வேண்டும் என்பதே எம் அவா. யாழ்ப்பாணத்திற்குள் மட்டும் திரும்பத் திரும்ப இச்சேவை ஆற்றப்படுவது மட்டுமன்றி, சிறிய சிறிய திருச்சபைகள் இருக்கும் இடங்களிலும், கிழக்கு மாகாணத்திலும் கூட இச்சேவை நடைபெற வேண்டியது அவசியமாகும். குறிப்பாக கிளிநொச்சி போன்ற இடங்களில் அவ்விடத்துப் பிள்ளைகள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் சூழ்நிலை சார்ந்த பிள்ளைகள் விழா, போட்டிகள், போன்ற பணிகள் ஆற்றப்படுவது நன்று. இதை சமயக் கல்விக்குழு கருத்தில் எடுக்க வேண்டும் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள். ஏனெனில் அத்தகைய இடங்களில் பல்வேறு திருச்சபைப் பிரிவுகள் இயங்கி தங்களுக்கென அங்கத்தவர்களை சேர்ப்பதில் முனைப்பாக ஈடுபடுவது மட்டுமன்றி, தவறான போதனைகள் மூலம் சிறுவர், வாலிபர்களின் உள்ளங்களை மாற்றி வருகின்றனர். சிறுவர்கள் மத்தியில் தவறான போதனைகள் ஊன்றிவிடுமேயானால் பின்னர், அவர்களின் மனதை மாற்றுவது அரிது. எனவே இந்தப் பருவத்திலிருந்தே சரியான போதனைகளை அவர்கள் மனதில் ஊன்றக் கட்டுவது மிகவும் அவசியம். இதற்காக இவர்கள் மத்தியில் முனைப்பாக பணியாற்றும் சவால் எம் ஒவ்வொருவருக்கும் தரப்படுகிறது. குறிப்பாக சமயக் கல்விக் குழு இவற்றை கருத்தில் எடுக்கும் என நம்புகிறோம்.

எனவே இறுதியாக சமயக் கல்விக்குழு சிறுவர் மத்தியில் இப்போது ஆற்றிவரும் பணிக்காக அவர்களைப் பாராட்டி, குறிப்பாக இதன் இயக்குநரை பாராட்டுவதோடு இந்தப் பணியை பரந்த நோக்கில் செய்ய வேண்டும் எனும் எமது தாழ்மையான வேண்டுகோளை முன்வைத்து சமயக் கல்விக் குழு மட்டுமல்ல நாம் ஒவ்வொருவரும் சிறுவர் பணிக்கென அயராது உழைக்க வேண்டும் எனும் சவாலை முன் வைக்கிறோம்.

''சிறுவரின் கள்ளங்கபடற்ற உள்ளம் - அது
கடவுள் வாழும் இல்லம்''

## மறு ஞானஸ்நானகாரர்?

திரியேகக் கடவுளின் நாமத்தில் ஒரே ஒரு ஞானஸ்நானமே உண்டு என திருமறை தெளிவாக சான்று பகருகின்றது. பவுல் அடிகளார் இதனைப் பற்றி கூறும்போது, ''ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு ஒரே ஆண்டவரும் ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே கடவுளும் பிதாவும் உண்டு (எபே 4:4-6). ஒரே கடவுள் உண்டு என்பது ஆண்டவரில் எங்களுடைய விசுவாசத்தையும், கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய திருச்சபையில் எங்களுடைய அங்கத்துவத்தையும், சுட்டி நிற்கின்றது. இதன் காரணமாகவே தென் இந்திய திருச்சபையானது ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலோ அல்லது பெந்தகொஸ்தே திருச்சபையிலோ அல்லது வேறு எந்த திருச்சபையிலோ ஒருவர் பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தை அங்கீகரித்துக் கொள்கிறது. இவ்விதமாக ஞானஸ்நானம் பெற்ற ஒருவர் தென்னிந்திய திருச்சபையில் சேரும் பொழுது மறுஞானஸ்நானம் பெறும் படியாக அவரை இத்திருச்சபை கேட்பதில்லை.

ஒரு ஞானஸ்நானத்தின் ஏற்புடைமையானது ஞானஸ்நானம் கொடுப்பவரின் பரிசுத்த தன்மையிலோ அல்லது மறுபடி பிறந்த அனுபவ சான்றிலோ, தங்கி இருப்பதில்லை. மாறாக, அது பிதா, குமாரன், பரிசுத்தாவியாகிய (மத்தேயு 28:19) ஒரே கடவுளின் நாமத்தில் (வல்லமையில்) மாத்திரமே தங்கியுள்ளது. சில கிறிஸ்தவர்கள் திருமறையில் இருந்து வசனங்களை தெரிந்து எடுத்து விளக்கம் கூறுகின்ற சில பிரசங்கிமாரது போதனைகளால் வழி தவறப்படுவதுண்டு. ஞானஸ்நானத்தின் ஏற்புடைமையானது எங்களுடைய விசுவாசத்திலோ அல்லது எங்களுடைய கிரியைகளிலோ தங்கியிருப்பதில்லை. மாறாக, அது கடவுளுடைய அருளிலேயே சார்ந்துள்ளது. ஞானஸ்நானம் கொடுப்பவரும், பெறுபவரும் கடவுளின் அருளில் மட்டுமே தங்கியிருக்கின்றனர். (காண்க. எபேசியர் 2:8).

ஒருவர் மீளவும் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று வாதிடுபவர் பவுலுக்கு எபேசுவில் ஏற்பட்ட அனுபவத்தை சான்றாக கொள்ளுகிறார். (அப் 19:1-6) புதிய ஏற்பாட்டை பொறுத்த வரையில் இந்தப் பகுதி மாத்திரமே மறு ஞானஸ்நானத்தைக் குறித்து சான்று பகருகின்ற ஒரே ஒரு பகுதியாகும். இப்பகுதியின் பின்னணியம் மிகத் தெளிவானதே எபேசுவில் ஞானஸ்நானம் பெற்றிருந்தோர் யோவான் கொடுத்த மனந்திரும்புதலுக்குரிய ஞானஸ்நானத்தை பெற்றிருந்தார்களே தவிர இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியைக் குறித்து கேள்விப்படவேயில்லை. ஆகையினால் அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெறும் பொருட்டு இயேசு கிறிஸ்துவின் நாமத்துள்ளாக பவுலினால் ஞானஸ்நானம் கொடுக்கப் பட்டார்கள். அப்பொழுது அவர்கள் நாவுகளால் பேசி தீர்க்க தரிசனம் சொன்னார்கள். (வசனம்6) ஞானஸ்நானத்தின் ஒரு முக்கியமான அடையாளமாக நாவுகளால் பேசுதல் உண்டா? இல்லையா? என்பது இன்னுமொரு இடத்தில் ஆராயப்படலாம். ஆனால் இங்கே காட்டப்படுவது யாதெனில் ஞானஸ்நானத்தின் போது எங்களுக்கு ஆவியானவர் அருளப்படுகிறார் (ரோமர் 8:16, 23, 26. 1 கொரி 12:13).

இதுவே திருமறையின் நிலைப்பாடாயின மறு ஞானஸ்நானம் எடுப்பவர்களைப் பற்றி எமது கரிசனை யாது?. இப்பிரச்சினை இறையியல் பிரச்சினை என்று கூறப்படுவதைப் பார்க்கிலும் இது ஒரு குருத்துவப் பிரச்சினை என்பதே பொருத்தமானதாகும். ஆதலால் இவ்விதம் ஞானஸ்நானம் எடுப்பவர்கள் கடவுளுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாதவர்கள் என்று சொல்வதைப் பார்க்கிலும் திருமறை ரீதியாக அவர்களது பாதுகாப்பற்ற தன்மையையே இந்நிலை காட்டுகின்றது என்று கூறுவதே பொருத்தமானதாகும். விசுவாசத்தில் குறைச்சல் உள்ளவர்களாக இவர்களை ஒருவேளை நோக்கக்கூடும். இப்படிப் பட்டோர் கரிசனையோடும், அன்புடனும் மீளவும் திருச்சபை வட்டத்தினுள் சேர்க்கப்பட்டு திருமறையின் சத்தியத்தை சரியான முறையில் வழங்கியும், நல்ல கிறிஸ்தவ கூட்டுறவுக்குள் அவர்களை வளப்படுத்திக் கொள்வதும் எங்களுடைய கடமையாகும்.

மேற்கூறியவற்றை தொகுத்து சுருங்கக் கூறின் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஒரே ஒரு ஞானஸ்நானம் உண்டு என்பதே திருமறையின் அதிகாரம் நிறைந்த போதனையாகும். மறு ஞானஸ்நானம் என்பது எமது இரட்சிப்புக்கு வேண்டியது அல்ல. மேலும், பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொள்வதற்கும் மறு ஞானஸ்நானம் தேவையில்லை. எமமுடைய ஆவிப் பிரகாரமான நிலைப்பாட்டை மறு ஞானஸ்நானமானது எந்த வகையிலும் வளப்படுத்தி விடுவதில்லை. ஏனென்றால் நாங்கள் கடவுளின் அருளினாலேயே இரட்சிக்கப்படுகிறோம். இதன் அடிப்படையில் கூறக்கூடியது, ஞானஸ்நானம் என்பது ஏதோ ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான கருவியன்று மாறாக, கடவுளின் அருளை வெளிப்படுத்த ஒரு அடையாளச் சின்னம் அல்லது அருட்சாதனமேயாகும்.

(இக்குறிப்புகள் தென் இந்திய திருச்சபையின் தென்கேரள அத்தியட்சாதீனத்தின் அத்தியட்சரான டாக்டர். சாமுவேல் அமிர்தம் அவர்கள் சமீபத்தில் ''சவுத்இன்டியன் சேர்ச்மன்'' என்னும் சஞ்சிகையில் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையை தொகுத்து எழுதப்பட்டவையாகும். வாசகர்களுடைய கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. - ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA ... BRANCH LIBRARY



# THE MORNING STAR

Diocesan, Office Vaddukoddai 29 07 - 1994

## EDITORIAL

## 'WE DRINK FROM OUR OWN WELLS'

"We Drink From our Own Wells: The Spiritual Journey of a People" is the title of a book written by the Liberation Theologian Gustavo Gutierrez. He said that to drink from one's own well is to live one's life in the Spirit of Jesus as one encounters him in his concrete historical reality.

This title is quite meaningful to our Tamil Community today. The Parliamentary Elections are planned to be held in August. The newspapers carry news of violence and deaths during the election campaigns in the South. The Tamils living in the South and in the so called "liberated areas" have the option to vote. What they must realize is that the elections are not going to make any impact in the lives of the Tamil Community. A Tamil representation in the Sri Lankan Parliament today will not in any way help ease the burdens of our community.

The government has imposed unrealistic and inhuman restriction on the life of our people living in the North. Our experience is just like that of the Israelites under the tyrant Pharaoh. Pharaoh's draconian measures included the demand for compulsory brick-making without the provision of straw to the oppressed Israelites. Today, we are compelled to carry out our tasks without any necessary supplies. Our students sit for the G. C. E. A/L examinations without any fundamental facilities. Our life goes on in the midst of increasing ferocity and deadly efficacy against us.

So, it is the duty of the Tamils living in the areas where voting is possible to recognize clearly the ways in which their own brethren are bound by hostility, fear, embargo standstill of transport and communications and all other forces of evil. Their voting will not help us. It may help a handful of Tamils living in the South who do not have any kind of experience we undergo in our day-to-day life.

It is said that there are two kinds of temptations to an oppressed community. One is to get satisfied with "incentives" and the other is to become co-opted for the majority cause. The oppressed community must avoid these two snares on their road to freedom.

We have a God-given heritage of Land, culture, uniqueness and identity on our own. It is our duty to assert this fact. What we need today is not a peace that speaks of absence of war or cessation of hostilites, but a peace that is based on justice and recognition of human rights. Our experiences in the past have clearly taught us that the road to genuine peace is through our struggles for human dignity and self-determination. We have become more and more convinced by our struggles that these are necessary to transform the structure that have kept us powerless exploited and marginalized. Any kind of solution to the ongoing problems must address to the fundamental issues or the root causes of the present conflict. It should answer the aspirations of the Tamil community. The struggles of the Tamil community for freedom represent an assertion of their right to life. Martin Luther King, Jr., said, "Freedom is never voluntarily given by the oppressor; it must be demanded by the oppressed".

It was John F Kennedy who said that those who make peaceful revolution impossible will make violent revolution inevitable. The oppressed must always look to themselves. Liberation must be from bottom up. Let us not be satisfied with the crumbs that fall from the tables. Let us have a new self-consciousness.

LET US DRINK FROM OUR OWN WELLS!!

## DONALD GANESHAKUMAR TROPHY

Donald Ganeshakumar Trophy-Cricket Tournament organised by the Centralites Sports Club was played at Central College grounds from Mid April till 17th July, 1994. 15 teams participated in this tournament.

University of Jaffna Cricket Team and Centralites Club Team entered the Finals. The Revd. D S. Thiagarajah, an old Centralite (Principal, CTS, Maruthanamadam) was the Chief Guest and the awards were given away by Mrs Thayalini Thiagarajah. The University team defeated Centralites by 04 runs.

Scores: University - 183
Centralites - 179

### Annual Convention

A three-day Convention Meetings were held at St James' Church, Nallur during its 166th year celebrations from the 23rd to the 25th July 1994. The Revd. G. D. Anandarajan of the Christian Theological Seminary, Chunnakam was the main speaker on the last two days while the Revd D. S. Thiagarajah, Principal of the Seminary preached on the first day. Bishop Ambalavanar was the preacher and celebrant of Holy Communion on the Anniversary day.

### Church ....

( Continued from page 1 )

Roman Catholic and CSI Churches participated. Mr. A Kadirgamar, Acting Director, CISRS presided over the meeting. A review of this book will appear in the Morning Star shortly.

### Art and Jaffna

(Contd form Last issue)

There is also a playful item-a combination of the story of the Garden of Eden with Indian style and humor. Here there are at least five apples being offered to both Adam and Eve, by a number of snakes writhing around their bodies, in a kind of Carnatic dance of temptation. The apples can scarcely be distinguished from the breasts of Eve, a sly comment on the self consciousness of sex that this First Sin was supposed to have generated.

We of the Church need Mark's example, and we could certainly use more well-trained working artists in our schools. I have been very encouraged these last years in Jaffna to see how our children respond creative opportunities in art. After seeing an exhibition we held at the Levi-Spaulding Boys' Home, the KNH representative got that organization to sponsor a world-wide children's art contest, in which several Sri-Lankan children won prizes. In the Vaddukoddai area the Lions Club sponsors contests to encourage the children's creative impulses. And the Diocese of CSI has also sponsored art contests recently.

Through art activity we can both express our feelings about political and economic repression and glorify God by bringing him gifts of beauty that come from within ourselves.

— Dr. Robert G. Porter

### Confirmation Services

### Uduvil

The Rt. Revd. Dr. S. Jebanesan confirmed 49 candidates as full members at Uduvil at a Confirmation Service held on Sunday, 24 th July 1994 at 7.30 a. m. The Revd. Jeyakumaran, Presbyter of Uduvil Church assisted at the service.

★

### Vaddukoddai

The Bishop confirmed 37 Candidates at a Confirmation Service held at the Cathedral Church, Vaddukoddai on Sunday, 24 th July 1994 at 4.00 p. m. The Revd. A. A Paul, the Presbyter at the Cathedral Church assisted the Bishop.

### Solidarity Fund Regional Committee

A meeting of the Regional Committee of the Solidarity Fund for Theological Education in South Asia was held at the Pegasus Reef Hotel, Wattala on Friday, June 17 th, 1994.

The meeting was chaired by Dr. Alexander John Malik, Bishop of Lahore, Pakistan. This meeting was attended by the delegates from Pakistan and Sri Lanka. The Revd. S. Jeyanesan, Revd. Daniel S. Thiagarajan (Principal CTS), Mr. A. Kadirgamar (Acting Director, CISRS) and the Revd G. D Anandarajan represented C. S. I. while Revd. Kumara Illangasinghe, Revd Rex Joseph and Revd. Jeyasiri Peries represented the Theological College of Lanka, Pilimatalawa. The other participants were Bishop Kenneth Fernando, Bishop Azarriah of Pakistan and Dr. Judo Poerwowidagdo of the W. C. C

It is learned that a consultation of this committee will be held in Kathmandu, Nepal in in March 1995.

### Bishops' Conference

A Conference for the Bishops of the Church of South India, Church of North India and Mar Thoma Church was held on 19 th May 1994 at the Ecumenical Christian Centre, Whitefield, Bangalore. Our Bishop, the Rt. Revd. Dr. S. Jebanesan served as the Secretary of this conference. Ways and means of coming together as 'ONE CHURCH' were further explored at this conference.

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No. QJ/14089 News Printed for the Jaffna Diocesan of the Church of South India at Arun Printers and Publishers 15, 2nd Lane, Jaffna. on Friday the 29th of July 1994 and Published by Mr. T. A. TAMBIYAPPA Diocesan Office, Vaddukoddai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org